ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 31.08.2015 |

## நாணயக் கொள்கை மீளாய்வு - 2015 ஓகத்து

2015 ஓகத்தில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கமானது தொடர்ந்து இரண்டாவது மாதமும் -0.2 சதவீத்தினைப் பதிவு செய்து எதிர்மறையான எல்லைக்குள் மாறாதிருந்தது. 2015 ஓகத்தில் ஆண்டுச் சராசரி அடிப்டையிலான முதன்மைப் பணவீக்கம் முன்னைய மாதத்தின் 1.3 சதவீதத்திலிருந்து 1.0 சதவீதத்திற்கு மேலும் மெதுவடைந்தது. அதேவேளை, பொருளாதாரத்தின் உள்ளார்ந்த விலை அசைவுகளை பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் 2015 ஓகத்தில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தின் 3.5 சதவீதத்திலிருந்து 3.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. முன்னோக்கிப் பார்க்கையில், மேம்பட்ட உள்நாட்டு நிரம்பல் நிலைமைகள் மற்றும் குறைவடைந்த உலக பண்ட விலைகளினால் உதவப்பட்டு பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் எதிர்பார்க்கைகள் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் சாதகமாகக் காணப்படும்.

உள்நாட்டு பணச் சந்தையில் வீழ்ச்சியடையும் திரவ மட்டங்களுடன் சேர்த்து குறுங்கால வட்டி வீதங்களில் சில அழுத்தங்கள் அவதானிக்கப்பட்ட போதிலும் அநேக சந்தை வட்டி வீதங்கள் குறைந்த மட்டங்களில் தொடர்ந்தும் மாறாதிருந்தன. தற்போதைய குறைந்த வட்டி வீதச் சூழலினால் உதவப்பட்ட வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான கொடுகடன் 2015 யூனில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2015 மேயில் 17.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 19.4 சதவீதத்திற்கு உந்தப்பட்டது. உண்மை நியதிகளில் பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடன் யூன் மாத காலப்பகுதியில் ஏறத்தாழ ரூபா 55 பில்லியனால் அதிகரித்த வேளையில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2015 முதல் காலாண்டுக் காலப்பகுதியில் தனியார் துறைக்கான கொடுகடன் 2014இன் இதையொத்தகாலப்பகுதியின் ரூபா 53 பில்லியன் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ரூ.205 பில்லியனால் அதிகரித்தது. ஆண்டின் முதலரைப் பகுதியில் தனியார் துறைக்கான கொடுகடன் விரிவாக்கமானது பெரும்பாலும் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைக்கான கொடுகடன்களின் உயர்ந்தளவான பகிர்ந்தளிப்புகளின் காரணமாக ஏற்பட்டது. இருப்பினும், குறைந்த வட்டி வீதங்களின் கொடுகடன் கிடைப்பனவினால் உந்தப்பட்ட உந்து ஊர்தி வாகனங்கள் உள்ளடங்கலாக நீண்டகால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட விரைவான அதிகரிப்பு சில கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளன. உற்பத்தித்திறனான பொருளாதார செயற்பாடுகளுக்கு உதவுவதற்கு கிடைக்கக்கூடிய தொடர்ச்சியான கொடுகடன்களை உறுதிசெய்யும் நோக்கில் மத்திய வங்கியானது

அத்தகைய அபிவிருத்திகளை நெருக்கமாக கண்காணிக்கின்ற வேளையில் எதிர்வரும் காலங்களில் கொடுகடனின் மிதமிஞ்சிய விரிவாக்கத்தினை தவிர்க்கின்றது. அதேவேளையில், அரச துறையினால் அதிகரித்த வங்கிக் கடன்பாடுகளுடன் சேர்ந்து தனியார் துறைக்கான கொடுகடனில் தூண்டப்பட்ட விரிவாக்கத்தினால் 2015 யூனில் விரிந்தபணம் ($M_2b$) முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 15.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 15.3 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது.

வெளிநாட்டுத் துறையில், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவினம் 2015 யூனிலும் அத்துடன் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் ஆண்டின் முதலரைப் பகுதியிலும் வர்த்தகப் பற்றாக்குறையினை விரிவாக்கியது. எனினும் ஒழுங்கான அடிப்படையிலான பணவலுப்பல்கள் மற்றும் சுற்றுலாத் துறையிருந்தான தொடர்ச்சியான வருவாய்கள் என்பன நடைமுறைக் கணக்கு மீதிக்கு உதவின. அதேவேளை, இக்காலப்பகுதியில் பொருளியலின் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளினை அதிகளவில் பதிலிறுக்கும் வகையில் நிதியியல் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் மேம்பட்டு மேலும் மெதுவடைந்தன. மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஒழுங்குகளின் கீழான மீள்கொடுப்பனவுகள் மற்றும் ஏசியன் கிளியறிங் அமைப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் அத்துடன் உள்நாட்டு வெளிநாட்டு செலவாணிச் சந்தையின் மேலதிக தளம்பல்களினைக் குறைப்பதற்கான மத்திய வங்கியின் தலையீடு என்பவற்றினைப் பிரதிபலிக்கும் விதத்தில் 2015 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனாகக் காணப்பட்ட மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2015 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் இந்திய றிசேர்வ் வங்கியுடனான நாணய பரஸ்பர ஒழுங்குகளின் எஞ்சிய வருவாய்களின் ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் பெறுமதியான தேறல்கள் மற்றும் ஐ.அ.டொலர் 500 மில்லியன் திட்டமிடப்பட்ட தவணைக் கடன்கள் உள்ளடங்கலான அரசாங்கத்திற்கான நீண்ட கால நிதியியல் பாய்ச்சல்கள் என்பவற்றுடன் மேம்பட்ட வியாபார தோற்றப்பாடு மற்றும் முதலீட்டாளர்கள் நம்பிக்கை என்பவற்றிலிருந்தான அதிகரித்த பாய்ச்சல்களுடன் சேர்ந்து ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு மற்றும் பூலோக அபிவிருத்திகளினைப் பிரதிபலிக்கும் விதத்தில் ஆண்டு காலத்தில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக இது வரை ரூ.134.30 இற்கு 2.3 சதவீதத்தினால் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

பொருளாதாரத்தின் மேற்குறிப்பிட்ட அபிவிருத்திகளைக் கவனத்தில் கொண்ட நாணயச் சபை 2015 ஓகத்து 31இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருக்கிறது. இதன்படி, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 6.00 சதவீதத்திலும் 7.50 சதவீதத்திலும் மாறாது பேணுவதெனத் தீர்மானித்தது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 7.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |